**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>மேல்முறையீட்டு வழக்கு எண். 12/2006</u>**

2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ம் நாள் செவ்வாய் கிழமை மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் நான்காவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. கி. கார்த்திக் ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பால்ராஜ் | தந்தை பெயர் | : பொன்னுசாமி |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 06.08.2024

**D.W. : 4**

**<u>சாட்சி இ.ம.எண்.18/2024 ல் 06.08.2024 அன்று பிறப்பித்த உத்தரவுப்படி திரும்ப அழைக்கப்பட்டு மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

29.07.2021 அன்று திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் நான் கேட்ட வினாவிற்கு அனுப்பப்பட்ட தகவல் **பி.வா.சா.ஆ.39** ஆகும். 26.08.2021 ம் தேதியில் திருச்சிராப்பள்ளி துணை பதிவுத்துறை அலுவலகத்தில் இருந்து ஆவண எண்கள். 1517/2005 மற்றும் 889/2007 தொடர்பாக மேல்முறையீடு தொடர்பாக எனக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு **பி.வா.சா.ஆ.40** ஆகும்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பி.வா.சா.ஆ.39 பதிலுக்கான கேள்வியில் மருதமுத்து முத்துராஜா என்பவரின்

வாரிசு சான்றிதழ் பற்றிய விவரம் கேட்டிருந்தேன். மேற்படி மருதமுத்து முத்துராஜா என்பவர் தாவா சொத்தின் முந்தைய உரிமையாளர் என்றால் சரிதான். அவர் 09.12.1998ல் இறந்துவிட்டார். பி.வா.சா.ஆ.40 தொடர்பான மேல்முறையீட்டை தாவா சொத்தை எனது தாயார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை மாவட்ட பதிவாளர் ரத்து செய்ததற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு விசாரணை நாளது தேதிவரை நிலுவையில் தான் உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.